NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 19 September 2018

# 4 நோய்களைக் கண்டறியும் எளிய சாதனம்

டெங்கி, மார்பகப் புற்றுநோய், கை கால் வாய்ப்புண் நோய், கர்ப்பப்பை புற்றுநோய் ஆகிய நான்கு நோய்களையும் கண்டறியும் ஆற்றல் கொண்ட ஒரு கருவியை ஆராய்ச்சி யாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம், அறிவியல் தொழில்நுட்ப மற்றும் ஆய்வு நிறுவன ஆராய்ச்சியாளர்கள் ஒன்றரை ஆண்டுகாலம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக இச்சோதனைக் கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

ஒருவரது திசு மாதிரி அல்லது உடல் திரவத்தின் ஒரு துளியைச் சிறு சோதனை வட்டில் இட்டு, பின் அது வேறொரு வட்டிற்கு வடிந்து வரும்போது நிறம் மாறுவதைக் கொண்டு நோய் உள்ளதா என்பது கண்டறியப்படும்.

$100 மதிக்கத்தக்க வழக்கமான ஆய்வகச் சோதனைகளைவிட, இச்சோதனைக் கருவி இரண்டு முதல் நான்கு மடங்கு விரைவாக இயங்கும் ஆற்றல் வாய்ந்தது.

இதன் தொடர்பில் சோதனை முடிவுகளை அலசி ஆராய்வதுடன் நோயின் தீவிரத்தை நிர்ணயிக்கவும் திறன்பேசிச் செயலி ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

கடன் அட்டை அளவில் இருக்கும் இக்கருவி ஒரு மணி நேரத்திற்குள் நோய்களுக்கான அறிகுறிகளைக் கண்டுபிடித்து விடும். இதற்குச் செலுத்தக் கூடிய கட்டணம் ஒரு வெள்ளிக்குள்தான் இருக்கும் எனக் கூறப்பட்டது.

இன்னும் ஓராண்டில் இக்கருவி விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.